# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:-12 தேதி:-20.04.2010

## 20.04.2010 அன்று கால 11 மணி அளவில் மாண்பு மிகு மத்திய தொலைதொடர்பு அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தின் விவாதத்தின் பதிவுகள்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாண்பு மிகு மத்திய தொலைதொடர்பு அமைச்சர் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளையும் DOT செயலர் வரவேற்றார். அவர் பேசும் போது சந்தாதாரர்களின் நலன்களை கணக்கில் கொண்டு வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற தனது விருப்பத்தை தெரிவித்தார்.

தற்போது உள்ள சந்தாதாரர்களுக்கு திருப்திகரமான சேவை தரப்படவில்லை என்றால் அவர்கள் வேறு நிறுவன தொலைபேசி இணைப்புகளை பெற்றுக் கொள்வார்கள் என மாண்பு மிகு மத்திய தொலைதொடர்பு அமைச்சர் விவரித்தார். அதிருப்தியுற்று வேறு நிறுவனங்களுக்கு சென்ற சந்தாதாரர்கள் மீண்டும் நமது சேவைக்கு வர மாட்டார்கள் என்பதால் வேலை நிறுத்தத்தினால் ஏற்படும் இழப்புகளை மிகுதி நேரப் பணி, மேம்படுத்தப்பட்ட சேவை உள்ளிட்டவைகளால் இயலாது எனவும் தெரிவித்தார்.

வைக்கப்பட்ட கோரிக்கைகளும் அதன் மீதான முடிவுகளும் கீழே தரப்பட்டுள்ளது.

| வ.எண் | சங்கங்களின் கோரிக்கைகள் | முடிவுகள் |
|---|---|---|
| 01 | ITS அதிகாரிகள் உடனடியாக இணைப்பது | 1)ஏற்கனவே குறிப்பிட்ட கால அளவிற்குள் அமைச்சரவைக்கான குறிப்பு அனுப்பப்படும். அதற்கு பின் அவர்களை BSNL இணைப்பது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br>2) DGM மற்றும் Management traineeக்களை BSNLல் தெரிவு செய்யும் பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.<br>3)தெரிவு செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை மற்றும் தகுதிகள் தொடர்பாக BSNL முடிவு செய்யும். |
| 02 | பங்கு விற்பனை கூடாது. | அரசாங்கம், இது தொடர்பாக கொள்கை முடிவு எடுக்கும் முன்னர் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப் படும். |
| 03 | விருப்ப ஓய்வு திட்டம் அமுலாக்கப்படக்கூடாது | அரசாங்கம், இது தொடர்பாக கொள்கை முடிவு எடுக்கும் முன்னர் சம்பந்தப்பட்ட அனைவரையும் |

| | | |
|---|---|---|
| | | கலந்தாலோசித்து முடிவு எடுக்கப் படும். |
| 04. | இறுதிக் கட்ட காப்பர் கேபிள்கள் தனியாருக்கு தரக்கூடாது மற்றும் சாம் பிட்ரோடா பரிந்துரைகள் அமுலாக்கப்படக் கூடாது | அரசாங்கம், இது தொடர்பாக கொள்கை முடிவு எடுக்கும் முன்னர் சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப் படும். BSNLன் கருத்துக்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். |
| 05. | மொபைல் இணைப்புகளுக்கான கருவிகள் உடனடியாக பெறவேண்டும் | சுமார் 2 கோடி இணைப்புகள் நிர்மாணம் செய்யும் பணி நடந்துக் கொண்டு உள்ளதால், மேலும் 1 கோடி இணைப்புகளுக்கான கருவிகள் வாங்குவதை BSNL உறுதி செய்யும். |
| 06. | 01.01.2007 முதல் IDA ஓய்வூதிய மாற்றம் | 01.04.2010 அன்று DOT செயலருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் விவரித்த படி, இந்த மாத இறுதிக்குள் அமச்சரவைக் குறிப்பு இறுதி செய்யப்பட்டு மற்ற அமைச்சரகங்களுக்கு பரிசீலனைக்கு அனுப்பப் படும். அமைச்சரவை பரிசீலனைக்கு இறுதியாக இந்தக் குறிப்பு அனுப்புவதற்கு மேலும் மூன்று மாத காலம் ஆகலாம். |
| 07 | ஊழியர்களுக்கான ஊதிய உடன்பாடு மாற்றம் மற்றும் ஊழியர்களுக்கான பதவி உயர்வுக் கொள்கை அமுலாக்கம் | 15 நாட்களுக்குள் ஊதிய மாற்றம் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என DOTக்கு மாண்பு மிகு மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் வழிகாட்டினார். |

இறுதியில், ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் கவனிக்கப்பட்டதால் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் எனும் தங்களின் கோரிக்கையினை சாதகமாக பரிசீலிக்க வேண்டும் என மாண்பு மிகு மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

கூட்டு நடவடிக்கைக் குழு தங்களின் திருப்தியை வெளிப்படுத்தி வேலை நிறுத்தத்தை விலக்க ஒத்துக் கொண்டனர். இந்தப் பிரச்சனையில் தலையிட்டு தீர்வு கண்டதற்காக மத்திய அமைச்சருக்கு தங்களின் நன்றியினை தெரிவித்தனர்.

தலைவரின் நன்றியுடன் கூட்டம் நிறைவுற்றது.

Com.V.A.N.NAMBOODIRI
CONVENOR, JAC.